அமைக்கின்றபோது சிலர் 'என்னுடைய நிலங்களில் அமைக்கக் கூடாது' என்று நீதிமன்றத்திற்குச் சென்று தடையாணை பெற்று விடுகிறார்கள். சில இடங்களிலே சிலர் பிரச்சினைகளை உருவாக்கி விடுகிறார்கள். ஒரு பக்கம் அந்தப் பகுதி மக்களே எங்களுக்கு தடையில்லா மின்சாரம் வழங்க வேண்டுமென்று கேட்கிறார்கள். அதற்கு வேண்டிய துணை மின் நிலையத்தை அமைத்து வழித்தடங்களை ஏற்படுத்தினால் அங்கே சில சக்திகள் குறுக்கிட்டுவிடுகின்றன. தேனி மாவட்டத்திலே மட்டுமல்ல; பல்வேறு இடங்களிலே பணிகள் தடைபடுகின்றன. அந்தத் தடைகளையெல்லாம் நீக்குவதற்கு தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் சட்டப்படி நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கின்ற அந்தப் பகுதியிலே உரிய சிறப்புக் கவனம் செலுத்தி, தடையை நீக்கி, தொடர்ந்து அந்தப் பணிகள் நடைபெறுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 122, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு, மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

122—

உதவிக் கோட்டப் பொறியாளர் அலுவலகம்

***56450—திரு. சி. சண்முகவேலு:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மடத்துக்குளம் தொகுதி, மடத்துக்குளத்தில் நெடுஞ்சாலைத் துறை உதவிக் கோட்டப் பொறியாளர் அலுவலகம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2015 ஆகஸ்ட் 25

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.*

(அ) மற்றும் (ஆ) மடத்துக்குளம் தொகுதியில் நெடுஞ்சாலைத் துறை உதவிக் கோட்டப் பொறியாளர் அலுவலகம் கட்டுவதற்கான நிலம் வருவாய்த் துறையிடமிருந்து நிலமாற்றம் செய்யப்பட்டவுடன் உட்கோட்ட அலுவலகம் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு அவர்கள்.*

திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தருமத்தின் வாழ்வுதனை சூது கவ்வும், தருமம் மீண்டும் வெல்லும்' என்ற வாக்கிற்கிணங்க, (மேசையைத் தட்டும் ஒலி) சோதனைகளைக் கடந்து சாதனைகளைப் புரிந்து வரும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன்.*

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நெடுஞ்சாலைத் துறை உதவிக் கோட்டப் பொறியாளர் அலுவலகம் மற்றும் உதவிப் பொறியாளர் அலுவலகத்திற்கு வருவாய்த் துறையின் மூலமாக இடம் தேர்வு செய்யப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறினார்கள். அந்த உதவிக் கோட்டப் பொறியாளர் அலுவலகமானது புதிதாக உருவாக்கப்பட்ட வட்டம், புதிதாக உருவாக்கப்பட்ட தொகுதியில் அமைக்கப்பட வேண்டும். அங்கே கோட்டப் பொறியாளர் அலுவலகத்திற்கு பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான இடம் தேசிய நெடுஞ்சாலைக்கு அருகிலே இருக்கின்றது. அந்த இடத்தைத் தேர்வு செய்து கொடுப்பதற்கு N.H.A.I. மறுத்த காரணத்தால், அங்கே இருக்கின்ற பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான இடத்திலே மாண்புமிகு நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கட்டடம் கட்டித் தருவதற்கு உரிய ஏற்பாடுகள் செய்து தருவார்களா என்று தங்கள் மூலமாகக் கேட்டு, அமருகிறேன்.

2015 ஆகஸ்ட் 25]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மடத்துக்குளத்தில் உள்ள நெடுஞ்சாலைத் துறையின் கட்டுமான மற்றும் பராமரிப்பு உட்கோட்ட அலுவலகம் மற்றும் பிரிவு அலுவலகம் தற்சமயம் பொதுப் பணித் துறையின் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இவ்வலுவலகத்திற்குப் புதிய அலுவலகம் கட்டுவதற்கு மடத்துக்குளத்தில் உள்ள அக்ரஹார கண்ணாடிபுதூர் கிராமப் புல எண் 32/1பி-யில் பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான 11.60 செண்ட் நிலத்தை நெடுஞ்சாலைத் துறைக்கு நில மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நிலம் கிடைக்கப்பெற்றவுடன் அலுவலகம் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு அவர்கள்.*

திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய விளக்கத்திற்கு நன்றியைக் கூறிக்கொள்கிறேன். மடத்துக்குளம் தொகுதிக்குட்பட்ட போக்குவரத்து அதிகமாக உள்ள கொழுமம் சாலையில் ஏற்கெனவே இரயில்வே மேம்பாலம் கட்ட வேண்டுமென்ற கருத்துரு அரசினுடைய பரிசிலனையில் உள்ளது. முன்னுரிமை அடிப்படையிலே, அந்த மேம்பாலம் கட்டுவதற்கு உரிய ஏற்பாடுகள் செய்து தருவார்களா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மடத்துக்குளம் தொகுதிக்குட்பட்ட மடத்துக்குளம் உடுமலை சின்னாரி சாலையானது வனப் பகுதியிலே உள்ள 14 கிலோ மீட்டர் நீளமான சாலையாகும். பத்தாண்டு காலமாக அந்தச் சாலை மிகவும் மோசமான நிலையிலே உள்ளது. அந்தச் சாலையைச் சீரமைக்கக்கூடிய வகையிலே வனத் துறையின் மூலமாகப் பல்வேறு முறைகளிலே கோரிக்கை வைத்தும் அந்தப் பணிகள் நடைபெறாமல் உள்ளன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வன உயிரின தேசிய குழுவின் அனுமதி பெற்று, சாலை மேம்பாட்டைச் செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுப்பார்களா என்று தங்கள்மூலமாகக் கேட்டு, அமருகிறேன்.

முற்பகல் 10–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் போக்குவரத்து நெரிசலாக இருக்கின்ற இரயில்வே தடங்களில் உயர்மட்டப் பாலம் கட்ட வேண்டும் என்று இங்கே கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். ஓர் உயர்மட்டப் பாலம் கட்ட வேண்டுமென்று சொன்னால், ஒரு இலட்சம் வாகனங்களுக்குமேல் அவ்வழியே கடந்து சென்றால்தான், அங்கே உயர்மட்டப் பாலம் கட்ட முடியும். ஒரு நாளைக்கு 24 மணி நேரத்தில் அந்தப் பாதையில் செல்கின்ற இரயில்களின் எண்ணிக்கை, அப்பொழுது கடவுகள் மூடுகின்றபொழுது இரு பக்கங்களிலும் நிற்கின்ற வாகனங்களின் எண்ணிக்கையைக் கணக்கில் எடுத்து, ஒரு இலட்சம் வாகனங்களுக்குமேல் இருக்குமேயானால், அங்கே உயர்மட்டப் பாலம் கட்டுவதற்கு அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும், வனத் துறைப் பகுதியிலே சாலையைச் சீரமைக்க வேண்டும் என்று கேட்டிருக்கின்றார்கள். வனத் துறையின் மூலமாக அனுமதியைப் பெற்று அந்தச் சாலையைச் சீரமைப்பதற்கு அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.*

திரு. அர. சக்கரபாணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் நெடுஞ்சாலைத் துறை கோட்டம் என்பது தமிழ்நாட்டிலேயே மிகப் பெரிய கோட்டம். பழனியைத் தலைமையிடமாகக் கொண்டு அதைப் பிரிப்பதற்கு அரசாணை வெளியிடப்பட்டும் இன்னும் அது செயல்பாட்டிற்கு வராமல் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைச் செயல்பாட்டிற்குக் கொண்டுவருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன். ஏற்கெனவே, பழனி, ஒட்டன்சத்திரம், வேடசந்தூர் என மூன்று உதவிக் கோட்டப் பொறியாளர் அலுவலகங்கள்*

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2015 ஆகஸ்ட் 25]

இருக்கின்றன. கொடைக்கானலையும் அதிலே சேர்த்து அந்தக் கோட்டப் பொறியாளர் அலுவலகம் செயல்படுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் கோட்டத்தை இரண்டாகப் பிரித்து பழனியைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய கோட்டம் உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. விரைவில் புதிய கோட்டம் அங்கே ஆரம்பிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.*

திரு. என்.ஆர். ரெங்கராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை புறவழிச் சாலை திட்டத்திற்கு, தமிழக அரசைப் பொறுத்தவரையிலே 26 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து நிருவாக அனுமதியும் வழங்கப்பட்டிருக்கிறது. அதற்காக நன்றியையும், மகிழ்ச்சியையும் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தப் பணிகள் வெகு விரைவில் தொடங்கப்பட வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் விரும்புகின்றார்கள். எனவே, வரும் மழைக்காலத்திற்கு முன்பு அந்தப் பணிகளைத் தொடங்க அரசு ஆவன செய்யுமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை முதற்கட்ட புறவழிச் சாலைப் பணிகள் ஏற்கெனவே டெண்டர் விடப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இரண்டாம் கட்டப் பணிகள் துவங்குவதற்கு சுமார் 22 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே டெண்டர்*

விரைவாக விடப்படுகின்ற சூழ்நிலை இருக்கின்றது. டெண்டர் பணிகள் முடிந்த பிறகு அந்தச் சாலைப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பீம்ராவ் அவர்கள்.*

திரு. க. பீம்ராவ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரவாயல் தொகுதிக்குட்பட்ட போரூர் மேம்பாலப் பணிகளுக்கு 4—வது முறையாக பூஜை போடப்பட்டிருக்கிறது. இன்னும் பணிகள் தொடங்கப்படவில்லை. மேலும், பூஜை போடாமல் பணிகளை விரைவாகத் தொடங்கி மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவருமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள போரூர் மேம்பாலம் குறித்து நான் ஏற்கெனவே பல முறை இங்கே குறிப்பிட்டிருக்கின்றேன். கடந்த கால ஆட்சியிலே அவர்கள் நிலத்தைக் கையகப்படுத்தாமலேயே இந்தப் பாலப் பணியினை மேற்கொண்டதால், நில உரிமையாளர்களெல்லாம் நீதிமன்றத்திற்குச் சென்ற காரணத்தினாலே காலதாமதம் ஏற்பட்டது. அதையெல்லாம் சரி செய்து இப்பொழுது டெண்டர் விடப்பட்டு பணி விரைவில் தொடங்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன் அவர்கள்.*

திரு. எஸ்.எஸ். ரமணீதரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தியூரைத் தலைமையிடமாகக் கொண்டு தனிக் கோட்டம் அமைத்துக்கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

2015 ஆகஸ்ட் 25]

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கோட்டம் வேண்டும் என்று கேட்டிருக்கின்றார்கள். தனிக் கோட்டம் பிரிக்க வேண்டும் என்று சொன்னால் ஏற்கெனவே இருக்கின்ற கோட்டத்தில் எவ்வளவு கிலோ மீட்டர் நீள சாலைகள் இருக்கின்றன என்பதைக் கணக்கிட்டு, அதற்கேற்பதான் கோட்டம் பிரிக்க முடியும். அதை ஆய்வு செய்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் போல அதிகமான கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் அங்கே இருப்பின், அதைப் பிரிப்பதற்கு அரசு ஆவன செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 123, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. முருகன், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

123—

தொழிற்பேட்டை

***53015—திரு. மு. முருகன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முதுகுளத்தூர் தொகுதியில் தொழிற்பேட்டை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் தொகுதியில் தொழிற்பேட்டை அமைப்பது தொடர்பான செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.